கேரளாவுக்கு கடத்த முயன்ற

40 கிலோ கஞ்சா பறிமுதல்; ரூ.1.20 லட்சம் ரொக்கம் பறிமுதல்

மதுரையை சேர்ந்த பெண் உட்பட 3 பேர் கைது

கூடலூர், பிப். 17

தேனி மாவட்டத்தில் கஞ்சா கடத்தலை முற்றிலும் ஒழிக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சினேகபிரியா உத்தரவிட்டதன் பேரில், மாவட்டம் முழுவதும் தீவிர ரோந்து பணிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இந்நிலையில், தமிழக – கேரள எல்லையான குமுளி வழியாக கேரளாவுக்கு கஞ்சா கடத்தப்படுவதாக எஸ்.பி.க்கு ரகசிய தகவல் கிடைத்தது.

அவரது உத்தரவின் பேரில், லோயர் கேம்ப் காவல் நிலைய எஸ்.ஐ. கருப்பையா தலைமையில், சிறப்பு எஸ்.ஐ.க்கள் நாட்ராயன், பக்கீர் முகமது உள்ளிட்ட போலீசார் லோயர் கேம்ப் – குமுளி மலைச்சாலையில் உள்ள பென்னிகுக் மணிமண்டபம் அருகேயுள்ள சோதனைச் சாவடியில் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது ஒரு பெண் உட்பட மூவர் பயணித்த சொகுசு காரை நிறுத்தி விசாரித்தபோது, அவர்கள் முரண்பட்ட தகவல்கள் வழங்கியதால் காரை சோதனை செய்தனர். அதில் மூன்று சாக்குகளில் அரசால் தடை செய்யப்பட்ட 40 கிலோ கஞ்சா இருப்பது கண்டறியப்பட்டது.

மேலும் ரூ.1.20 லட்சம் ரொக்கம் இருந்ததும் தெரியவந்தது.

போலீசார் மூவரையும் கைது செய்து லோயர் கேம்ப் காவல் நிலையத்தில் விசாரணை நடத்திய போது, அவர்கள் மதுரை முனிச்சாலை பகுதியைச் சேர்ந்த முனியசாமி (36, பாலசுப்பிரமணியன் (38, செல்வி (47) என்பதும், ஒடிசா மாநிலத்தில் இருந்து குறைந்த விலையில் கஞ்சாவை வாங்கி கேரளாவில் அதிக விலையில் விற்பனை செய்ய கொண்டு வந்ததும் தெரிய வந்தது. இதனைத் தொடர்ந்து மூவரையும் கைது செய்த போலீசார், 40 கிலோ கஞ்சா, கடத்தலில் பயன்படுத்திய சொகுசு கார், ரூ.1.20 லட்சம் ரொக்கம் மற்றும் 4 செல் போன்களை பறிமுதல் செய்தனர்.

பழனி அருகே

பைக்குகள் மோதல்; மளிகை வியாபாரி பலி

பழனி, பிப்.17

பழனி அருகே பைக்குகள் மோதி மளிகை வியாபாரி பலியானார். பழனி அருகே உள்ளது ஆயக்குடி. இந்த ஊரைச் சேர்ந்தவர் ஷேக் பக்ருதீன் வயது 65. இவர் மளிகை கடை வைத்துள்ளார். நேற்று இவர் தனது மோட்டார் சைக்கிளில் பழனி டு திண்டுக்கல்சாலையில்நேதாஜி நகர் அருகே வரும்பொழுது, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியது. ஷேக் பக்ருதீன் மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த பழனி அடிவாரத்தைச் சேர்ந்த திருமுருகன் வயது 29 இருவரும் படுகாயம் அடைந்தனர். இது வரையும் போலீசார் மீட்டு சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் ஆனால் அங்கு ஷேக் பக்ருதீன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் திருமுருக னுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது பற்றி பழனி டவுன் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

சென்னையில்

மின்சார ரெயில் சேவையில் மாற்றம்

தென்னக ரெயில்வே அறிவிப்பு

சென்னை: பிப்.17

சென்னை சென்ட்ரல்–கூடூர் மார்க்கத்தில் சூலூர்பேட்டை யார்டில் பொறியியல் பணி காரணமாக, புறநகர் மின்சார ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, சென்னை சென்ட்ரல் – சூலூர்பேட்டைக்கு வரும் 19, 21 ஆகிய தேதிகளில் நண்பகல் 12.10 மணிக்கு புறப்படும் மின்சார ரெயில், எளாவூர்–சூலூர்பேட்டை இடையே பகுதி ரத்து செய்யப்படுகிறது.

சூலூர்பேட்டை – சென்னை சென்ட்ரலுக்கு மேற்கண்ட நாட்களில் மதியம் 1.15 மணிக்கு புறப்பட வேண்டிய மின்சார ரெயில், சூலூர்பேட்டை – எளாவூர் இடையே பகுதி ரத்து செய்யப்படுகிறது.

தாம்பரம் மெமு ரயில் சென்னை எழும்பூர் – விழுப்புரம் மார்க்கத்தில், மைலம் – திண்டிவனம் இடையே பொறியியல் பணி காரணமாக, தாம்பரம் – விழுப்புரம் மெமு பயணிகள் ரெயில் சேவையில் மாற்றம் செய்யப்படுகிறது.

அதன்படி, தாம்பரம்–விழுப்புரத்துக்கு வரும் 17, 19, 21 ஆகிய தேதிகளில் காலை 9.40 மணிக்கு புறப்படும் மெமு பயணிகள் ரெயில், திண்டிவனம் – விழுப்புரம் இடையே பகுதி ரத்து செய்யப்படுகிறது.

விழுப்புரம் – சென்னை கடற்கரைக்கு மேற்கண்ட நாட்களில் மதியம் 1.30 மணிக்கு புறப்படும் மெமு பயணிகள் ரெயில், விழுப்புரம் – திண்டிவனம் இடையே பகுதி ரத்து செய்யப்படுகிறது.

இத்தகவல் சென்னை ரெயில்வே கோட்ட செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சங்கரன்கோவிலில் இன்று சம்பவம்

அரசு வங்கியில் திடீர் தீ விபத்து

பல லட்சம் பொருட்கள் எரிந்து நாசம்

நெல்லை, பிப்.17

சங்கரன்கோவிலில் இன்று காலை அரசு வங்கியில் ஏற்பட்ட தீ விபத்தில் பல லட்சம் மதிப்பிலான பொருட்கள் எரிந்து நாசம் அடைந்தது.

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவில் பேருந்து நிலையம் அருகே உள்ள தனியார் வணிக வளாகத்தின் முதல் தளத்தில் அரசு வங்கி ஒன்று இயங்கி வருகிறது. இந்த நிலையில் இன்று காலை திடீரென வங்கி அலுவலகத்தில் தீப் பற்றியது. இந்த தீ மளமளவென பரவி வங்கி முழுவதும் பற்றி எரியத் தொடங்கியது. இதனால் அங்கு பயங்கர புகைமூட்டம் ஏற்பட்டது. இதை பார்த்தவர்கள் உடனடியாக சங்கரன்கோவில் தீயணைப்பு மீட்பு நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு வந்த தீயணைப்புத் துறையினர் நீண்ட நேரமாக போராடி தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். தொடர்ந்து அங்கு 3 தீயணைப்பு வாகனங்கள் வரவழைக்கப்பட்டு தண்ணீரை பீச்சி அடித்து மீட்புப் பணிகளில் ஈடுபட்டனர். இந்த தீ விபத்தில் வங்கியில் இருந்த கணினிகள் மற்றும் பல லட்ச ரூபாய் பொருள்கள் சேதம் அடைந்துள்ளது. இந்த வங்கி சங்கரன்கோவில் பிரதான சாலையில் உள்ளதால் தீப்பற்றிய சம்பவம் அங்கு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இதனிடையே வங்கி அதிகாரிகள் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர். இது தொடர்பாக சங்கரன்கோவில் போலீசாரும் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்து விசாரணை நடத்தி வருகின்றனர். போலீசாரின் முதல் கட்ட விசாரணையில் மின் கசிவுகாரணமாகதீவிபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. ஆனாலும் தீ முழுமையாக அணைக்கப்பட்ட பின்னர் தான் அதற்கான காரணமும், பொருட்கள் நஷ்டம் குறித்தும் தெரியவரும் என்று கூறப்படுகிறது.

அரசு மருத்துவமனை சுவர் மீது

போலீஸ் வாகனம் மோதியது; கூடுதல் எஸ்.பி, படுகாயம்

மருத்துவமனையில் சிகிச்சை

பெரம்பலூர், பிப்.17–

பெரம்பலூரில் இன்று காலை கூடுதல் எஸ்.பி பாலமுருகன் என்பவர் வந்த வாகனம் பெரம்பலூர் துறையூர் சாலையில் அரசு மருத்துவமனை அருகே சென்றது.

அப்பொழுது பிரிவில் திரும்ப முடியாமல் கட்டுப்பாட்டை இழந்து அரசு மருத்துவமனையின் சுற்றுச்சுவரை இடித்து தள்ளிக் கொண்டு சினிமா போல் மோதிக் கொண்டு உள்ளே நுழைந்தது.

இந்த விபத்தில் கூடுதல் எஸ்.பி, பாலமுருகன் பலத்த காயம் அடைந்தார். இதையடுத்து அவரை அருகில் உள்ள அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்று அனுமதித்தனர். அங்கு அவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த விபத்து சம்பவம் குறித்து பெரம்பலூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மகளிர் உரிமைத் தொகை வழங்க

ஒரே நாளில் 1.31 கோடி மகளிருக்கு கொடுக்க பணம் எங்கிருந்து வந்தது?

தமிழிசை கேள்வி

சென்னை, பிப்.17

தமிழக அரசு கடும் நிதிச் சுமையில் இருப்பதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் கூறிவந்த நிலையில், ஒரே நாளில் 1.31 கோடி மகளிருக்கு தலா ரூ.5,000 வழங்க பணம் எங்கிருந்து வந்தது என பாஜக மூத்த தலைவரும், முன்னாள் ஆளுநருமான தமிழிசை சௌந்தரராஜன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

முதல்வர் மு.க.ஸ்டாலின் எப்போது பேசினாலும் மத்திய அரசிடம் இருந்து தமிழகத்துக்கு வரவேண்டிய பணம் வரவில்லை, மத்திய அரசு தமிழகத்தை வஞ்சிக்கிறது என்றெல்லாம் தொடர்ந்து குற்றஞ்சாட்டி வருகிறார்.

இதைக் காரணமாகக் கூறி சொத்து வரி, மின்கட்டணம், பத்திரப் பதிவு, கட்டடம் கட்டுவதற்கான அனுமதி, குப்பை வரி, கழிவுநீர் வரி, குடிநீர் வரி, கல்விக் கட்டணம், வாகன வரி உள்ளிட்டவற்றின் கட்டணத்தை உயர்த்தியுள்ளது திமுக அரசு. மணல், ஜல்லி, சிமெண்ட் போன்ற கட்டுமானப் பொருள்கள், பால் பொருள்கள் உள்ளிட்டவற்றின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

தி.மு.க. அரசின் நிர்வாகத் திறனின்மையால் தமிழகம் ரூ.9.55 லட்சம் கோடி கடனில் மூழ்கி இருக்கிறது. இந்தியாவிலேயே அதிக கடன் வாங்கி, அதிக வட்டி செலுத்தி நிதி நெருக்கடியில் சிக்கி இருக்கிறது.

ஒட்டுமொத்தமாக மூன்று மாதங்களுக்கு மகளிர் உரிமைத் தொகை ரூ.3,000, கோடை காலத்துக்கு சிறப்புத் தொகை ரூ.2,000 என திமுக அரசு கொடுத்துள்ளது. திமுக ஆட்சிக்கு வந்த முதல் 28 மாதங்கள் உரிமைத் தொகையை ஏன் கொடுக்கவில்லை?

அரசு ஊழியர் அல்லாத பொதுமக்களின் வாக்குகளைக் குறிவைத்தாகிவிட்டது. அரசு ஊழியர்களுக்கு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை திமுக அரசு அறிவித்துள்ளது. ஆனால், நிதிப் பற்றாக்குறை இருப்பதால், அதை இப்போது நிறைவேற்ற முடியாது எனவும் தெரிவித்துள்ளது.

அப்படியென்றால் மகளிர் உரிமைத் தொகைக்கு மொத்தமாக வழங்க இப்போது நிதி எங்கே இருந்து வந்தது?. பொதுமக்கள் சிந்திக்க வேண்டும். இப்போது வழங்கப்பட்டிருக்கும் பணம் உங்கள் பணம்தான். அதே நேரத்தில் கடன் சுமை ஒவ்வொருவர் தலையிலும் சுமத்தப்பட்டு இருக்கிறது.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

பழனி அருகே

பைக்குகள் மோதல்; மளிகை வியாபாரி பலி

பழனி, பிப்.17

பழனி அருகே பைக்குகள் மோதி மளிகை வியாபாரி பலியானார். பழனி அருகே உள்ளது ஆயக்குடி. இந்த ஊரைச் சேர்ந்தவர் ஷேக் பக்ருதீன் வயது 65. இவர் மளிகை கடை வைத்துள்ளார். நேற்று இவர் தனது மோட்டார் சைக்கிளில் பழனி டு திண்டுக்கல்சாலையில்நேதாஜி நகர் அருகே வரும்பொழுது, எதிரே வந்த மோட்டார் சைக்கிள் மோதியது. ஷேக் பக்ருதீன் மற்றும் மோட்டார் சைக்கிளில் வந்த பழனி அடிவாரத்தைச் சேர்ந்த திருமுருகன் வயது 29 இருவரும் படுகாயம் அடைந்தனர். இது வரையும் போலீசார் மீட்டு சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர் ஆனால் அங்கு ஷேக் பக்ருதீன் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் திருமுருக னுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இது பற்றி பழனி டவுன் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

ICICI Home Finance

கார்ப்பரேட் அலுவலகம்: ஐசிஐசிஐ ஹோம் கபைனான்ஸ் கம்பெனி லிமிடெட், ஐசிஐசிஐ எச்எஸ்பி டவர், அந்தேரி - குர்லா சாலை, அந்தேரி (கிழக்கு), மும்பை - 400059, இந்தியா

பிளை அலுவலகம்: ஐசிஐசிஐ ஹோம் கபைனான்ஸ் கம்பெனி லிமிடெட், அபெக்ஸ் சேம்பர், அலுவலகப் பகுதி எண்.3, 3வது தளம், எண்.20, தியாகராய சாலை, டி நகர் சென்னை- 600017

தனியார் ஒப்பந்தத்தின் மூலம் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான அறிவிப்பு

நிதி சொத்துக்களின் பத்திரமயமாக்கல் மற்றும் மறுகட்டமைப்பு மற்றும் பாதுகாப்பு வட்டி அமலாக்கச் சட்டம், 2002 இன் பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் விதி 8(6)r/w விதி 9 (1) உடன் படிக்கப்பட்டதன் கீழ் தனியார் ஒப்பந்தத்தின் மூலம் அசையா சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

ஐசிஐசிஐ ஹோம் கபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் (ஐசிஐசிஐ எச்எஸ்பி) கீழே குறிப்பிடப்பட்டுள்ள அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விற்பனைக்காக பல மின்-ஏலங்களை நடத்தியது. இருப்பினும், அத்தகைய அனைத்து மின்-ஏலங்களும் தோல்வியடைந்தன. இப்போது, ஆர்வமுள்ள வாங்குபவர் ஒருவர் ஐசிஐசிஐ எச்எஸ்பியை அணுகி, குறிப்பிட்ட சொத்தை ரூ. 10,00,000/- இதன் மூலம் பொதுமக்களுக்கு, குறிப்பாக கடன் வாங்குபவர்(கள்) மற்றும் உத்தரவாததாரர்(கள்) ஆகியோருக்கு, ஐசிஐசிஐ ஹோம் கபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் கைப்பற்றப்பட்ட பாதுகாக்கப்பட்ட கடனாளிக்கு அடமானம் வைக்கப்பட்ட/வசூலிக்கப்பட்ட கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்து. கீழே கொடுக்கப்பட்டுள்ள சுருக்கமான விவரங்களின்படி, தனியார் ஒப்பந்தத்தின் மூலம் "எங்கே இருக்கிறதோ அப்படியே", "எது இருக்கிறதோ அப்படியே" மற்றும் "எது இருக்கிறதோ அதுவாக" விற்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது:

வ. எண்.	கடன் வாங்கியவர்(கள்)/ கூட்டுக் கடன் வாங்கியவர்கள்/ உத்தரவாதம் அளித்தவர்கள் / சட்டப்பூர்வ வாரிசுகளின் பெயர், கடன் கணக்கு எண்.	தெரிந்து கலமைகளுடன் கூடிய பாதுகாக்கப்பட்ட சொத்து(களின்) விவரங்கள், ஏதேனும் இருந்தால்	நிலுவைத் தொகை	இருப்பு விலை / முன்பணம் வைப்புத் தொகை	சொத்தை ஆய்வு செய்யும் தேதி மற்றும் நேரம்	ஏலத்தின் தேதி மற்றும் நேரம்	ஏலத் தேதிக்கு ஒரு நாள் முன்பு	SARFAESI நிலை
(அ)	(ஆ)	(இ)	(ஈ)	(உ.)	(ஊ)	(எ)	(ஏ)	(ஐ)
1.	பி.சக்தியேந்திரன் (கடன் வாங்கியவர்) கிறிஸ்டின் சக்தியேந்திரன் (இணை கடன் வாங்கியவர்கள்) கடன் எண். LHCTN00001462332 & LHCTN00001463167	பிளாட் எண். F1, முதல் தளம், பிளாட் எண். 1, ரோஸ் நகர், நந்திவரம், 445/1, 442/4, துணைப்பிரிவு எஸ். எண். 442/4A1, செங்கல்பட்டு, சென்னை, தமிழ்நாடு-600001	ரூ. 21,68, 076/- பிப்ரவரி 13, 2026	ரூ. 10,00, 000/- ரூ. 1,00, 000/-	பிப்ரவரி 27, 2026 காலை 11:00 மணி வரை	மார்ச் 05, 2026 பிற்பகல் 03:00 மணி வரை	மார்ச் 04, 2026 பிற்பகல் 04:00 மணி வரை	நேரடி உடைமை

எங்கள் ஏல நிறுவனமான வேல்யூ டிரஸ்ட் கேபிடல் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டின் இணையதளத்தில் (URL இணைப்பு- https://BidDeal.in) ஆன்லைன் ஏலம் நடத்தப்படும். வருங்கால ஏலதாரர்(கள்) மார்ச் 04, 2026 மாலை 04:00 மணிக்கு முன் அல்லது அதற்கு முன் கட்டுரையின் மேல் குறிப்பிடப்பட்டுள்ள ஐசிஐசிஐ ஹோம் கபைனான்ஸ் கம்பெனி லிமிடெட். கிளை அலுவலக முகவரியில் ஈஎம்டி பண வைப்புத்தொகை (EMD) RTGS/டிமாண்ட் டிராஃப்ட் (DD) (நெடுவரிசை E ஐப் பார்க்கவும்) சமர்ப்பிக்க வேண்டும். வருங்கால ஏலதாரர்(கள்) கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதிவு படிவம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் படிவத்தின் கையொப்பமிடப்பட்ட நகலை மார்ச் 04, 2026 அன்று மாலை 05:00 மணிக்குள் அல்லது அதற்கு முன் ஐசிஐசிஐ ஹோம் கபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் கிளை அலுவலக முகவரியில் சமர்ப்பிக்க வேண்டும். ஈஎம்டி தொகை வைப்புத்தொகை கோரிக்கை வரைவோலை (DD) தேசியமயமாக்கப்பட்டவங்கியிடமிருந்து "ஐசிஐசிஐ ஹோம் கபைனான்ஸ் கம்பெனி லிமிடெட் - ஏலம்" என்ற பெயரில் கட்டுரையின் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கிளை அலுவலக முகவரியில் செலுத்தப்பட வேண்டும். பொதுமக்கள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆர்வமுள்ள வாங்குபவர் வழங்கும் தொகையை விட அதிகமான தொகையை தங்கள் ஏலங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்கூறிய ஆர்வமுள்ள வாங்குபவர் வழங்கும் தொகையை விட அதிகமான ஏலங்கள் எதுவும் ஐசிஐசிஐ H F C ஆல் பெறப்படாவிட்டால், அடமானம் வைக்கப்பட்ட சொத்து, பாதுகாப்பு வட்டி (அமலாக்க) விதிகள், 2002 இன் விதி 8(6) r/w விதி 9 (1) இன் படி, குறிப்பிட்ட ஆர்வமுள்ள வாங்குபவருக்கு விற்கப்படும் என்பதை இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.விற்பனையின் ஆய்வு, விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அல்லது ஏலங்களை சமர்ப்பித்தல் தொடர்பான கூடுதல் விளக்கங்களுக்கு, தயவுசெய்து 9920807300 என்ற எண்ணில் ஐசிஐசிஐ ஹோம் கபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்டைத் தொடர்பு கொள்ளவும்.

மேலும் எந்த காரணங்களையும் வழங்காமல் ஏதேனும் அல்லது அனைத்து ஏலங்களையும் நிராகரிக்க அங்கீகரிக்கப்பட்ட அதிகாரிக்கு உரிமை உண்டு. விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, தயவுசெய்து https://www.icicihfc.com/ ஐப் பார்வையிடவும்.

தேதி: பிப்ரவரி 17, 2026 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, "ஐசிஐசிஐ ஹோம் கபைனான்ஸ் கம்பெனி லிமிடெட்"**
இடம்: சென்னை **CIN எண்:- U65922MH1999PLC120106**

OMKARA ASSETS RECONSTRUCTION PVT. LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிமிடெட்

பதிவு அலுவலகம்: எண் 9, M.P நகர், முதல் தெரு, கொங்கு நகர் விரிவு திருப்பூர் 641607.
கட்டுரிமை நிறுவன அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47,ஆவது தளம், N.C கெல்லர் மார்க், R.G கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை – 400028.
தொ.பே. எண்: 022-26544000 | **மின்னஞ்சல்:** mumbai@omkaraarc.com www.omkaraarc.com | **CIN:** U67100TZ2014PTC020363

[பிற்சேர்க்கை – IV-A] [பார்க்க - விதி 8(6)]

அசையாச் சொத்தின் விற்பனைக்கான E-ஏலப் பொது அறிவிப்பு

E -ஏல நாள் : 26.03.2026

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) -இன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான E-ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கும் பரவலாகவும் **M/s தங்கமணி டெக்ஸ்டைல்ஸ் (கடன்தாரர்), உரிமையாளர் - திரு. A முத்துக்குமார் மற்றும் ஜாமீன்தாரர்: திருமதி G. யசோதா தேவி** ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையும் சொத்துக்கள், அசையாச் சொத்துக்கள் ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்பட்டுள்ளது. தி லக்ஷிமி விலாஸ் வங்கி லிமிடெட் (முற்பெயருடு DBS வங்கி இந்தியா லிமிடெட்) நிறுவனமானது 30.11.2023 நாளிட்ட ஒப்படைப்பு ஒப்பந்தத்தின்படி கீழ்க்காணும் கடன்தாரர்கள், ஜாமீன்தாரர் ஆகியோரின் கடனை M/s. ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட்., (OARPL) நிறுவனத்திடம் ஒப்படைத்தது. இது நிறுவனச் சட்டம் 1956-இன் கீழ் நிறுவப்பட்டதும் இந்திய ரிசர்வ் வங்கியிடம் பதிவு பெற்றதுமான ஒரு ஈட்டுறுதி மற்றும் சொத்துச் சீரமைப்பு நிறுவனமாகும். இதன் பதிவு அலுவலகம் - 9, M.P நகர், 1,ஆவது தெரு, கொங்கு நகர் விரிவு, திருப்பூர் - 641607 எனும் முகவரியிலும் கட்டுரிமை நிறுவன அலுவலகம் - கோஹினூர் சதுக்கம், 47,ஆவது தளம், N.C. கெல்லர் மார்க், R.G. கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை 400028 எனும் முகவரியிலும் அமைந்துள்ளன. மேலும் இது, **ஓம்காரா PS 07/2023-24 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டியாகவும்** செயல்படுகிறது.

இச்சூழலில், ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் அதிகாரப்பூர்வ அலுவலரால் கடனீட்டுச் சொத்தானது **அடையாள சுவாதீனம்** செய்யப்பட்டுள்ள நிலையில் கீழ்க்காணும் கடன்தாரர்களிடமிருந்து / ஜாமீன்தாரர்களிடமிருந்து / அடமானதாரர்களிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ள பின்வரும் நிலுவைத் தொகைகளைத் திரும்பப் பெறும் பொருட்டு இந்தக் கடனீட்டுச் சொத்துக்கள் **"உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்"** எனும் அடிப்படையில் கீழே குறிப்பிட்டுள்ள நாளன்று விற்பனை செய்யப்பட உள்ளன. இதற்கான குறைந்தபட்ச விலை, டெபனிட்தொகை (EMD) மற்றும் இதர விவரங்கள் பின்வருமாறு:

கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் பெயர்	கடனீட்டுச் சொத்துக்களின் விவரங்கள்	குறைந்தபட்ச விலை	டெபனிட் தொகை (EMD)	விலை உயர்த்தும் மடங்கு
தங்கமணி டெக்ஸ்டைல்ஸ், (உரிமையாளர் - A முத்துக்குமார்), ஜாமீன்தாரர் - திருமதி G. யசோதா தேவி	சோமம்புத்தூர் பதிவு மாவட்டம், குடூர் சார்பதிவு மாவட்டம், குடூர் வட்டம், கண்ணம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த SF எண் 308/2C, பட்டா எண் 2028, புஞ்சை ஏக்கர் 1.02, இது 2.31 ஏக்கரில் அடங்கியது. இத்துடன் கட்டப்பட்ட மற்றும் பரப்பளவு 7500 சதுர அடியில் மின்சார இணைப்புடன் கூடிய சிமெண்ட் ஷீட் கூரையிட்ட கொட்டகை உட்பட மின்சார இணைப்புடன் கூடிய கூரையிட்ட கொட்டகை சேர்த்து **உரிமையாளர் :** M யசோதா தேவி.	ரூ. 3,01,00,000/-	ரூ. 30,00,000/-	ரூ. 1,00,000/-

கோரிக்கை அறிவிப்பு நாள் : 20.07.2019 **கவுதின நாள் : 14.11.2019**

நிலுவைத்தொகை – ரூபாயில் : 31.01.2026 நாள்படி **ரூ.4,12,44,856/-** (ரூபாய் நான்கு கோடியே பன்னிரண்டு இலட்சத்து நாற்பத்து நான்காயிரத்து எண்ணூற்று ஐம்பத்தாறு மட்டும்)

டேவணித் தொகை மற்றும் ஏலப் படிவம் தாக்கல் செய்யக் கடைசி நாள் : 25.03.2026 – மாலை 06:00 மணி வரை

ஏல நாள் மற்றும் நேரம்: 26.03.2026 அன்று பிற்பகல் 03:00 மணி முதல் மாலை 04:00 மணி வரை. **ஆய்வு நாள் மற்றும் நேரம் : 13.03.2026 அன்று பிற்பகல் 03:00 மணி முதல் மாலை 05:00 மணி வரை.**

விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

1. ஏலமானது OARPL நிறுவனத்தின் சேவை வழங்கல் நிறுவனமான **"M/s. ஆர்கா E-மார்ட் பிரைவேட் லிட்."** மூலம் 'இணைய வழியில்' நடத்தப்படும். இணைய வழி ஏ-ஏல விலைகோரல் படிவம், அறிவிக்கை, இணைய வழி ஏலத்தின் பொதுவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவை அடங்கிய ஏ-ஏல ஒப்பந்தப்பள்ளி ஆவணத்தைப் பெற - **www.auctionbazaar.com**, தொடர்புக்கு: விற்பனை உதவித் தரவழித் தொடர்பு எண் / கைப்பேசி எண்: 8370969696, உதவி மின்னஞ்சல் முகவரி: contact@auctionbazaar.com / support@auctionbazaar.com, தொடர்பு கொள்ள வேண்டியவர்: **திருமதி M. கிரண்மாய், கைப்பேசி எண் : 7997043999, மின்னஞ்சல் : kiran@auctionbazaar.com.**
2. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் சொத்து தொடர்பான கேள்விகளுக்கு அல்லது சொத்து ஆய்வு குறித்து அறிய தொடர்பு கொள்ள வேண்டிய உரிய அதிகாரப்பூர்வ அலுவலர்: ஆஷிஷ் நங்கியா (கைப்பேசி - 9323642445), மின்னஞ்சல் : ashish.rangia@omkaraarc.com. அல்லது மேற்கூறிய முகவரியில் வேலை நாட்களில் அலுவல் நேரத்தில் தொடர்பு கொள்ளலாம்.
3. ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலப்புள்ளியுடன் சேர்த்து இன்னம்வன்சி மற்றும் பாங்க்ரப்ட்சி சட்டம் 2016, பிரிவு 29A-இன் கீழான உறுதிமொழியையும் அளித்து அதற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டும். தவறினால், செலுத்தப்பட்ட அத்தொகை பறிமுதல் செய்யப்படும். **விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் http://omkaraarc.com/auction.php எனும் இணையத்தளத்தில் அளிக்கப்பட்டுள்ள இணைப்பைக் காண்க.**

கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) -இன் கீழான சட்டப்படியான விற்பனை அறிவிப்பு.

இந்த அறிவிப்பு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002-இன் கீழும் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6) -இன்படியும் மேற்குறிப்பிட்ட கடன் கணக்கின் கடன்தாரர்களுக்கு / கூட்டுக் கடன்தாரர்களுக்கு மேற்கண்ட நாளிலும் நேரத்திலும் பொது ஏல முறையினான விற்பனை நடைபெற உள்ளது பற்றியும் விரும்பினால் மேலே கூறியபடி நிலுவைத் தொகைகளைத் தொகை செலுத்தப்படும் நாள் வரையினான செலவினங்கள் மற்றும் செலவுகள் ஆகியவற்றுடன் செலுத்திச் சொத்துக்களை மீட்டுக் கொள்ளும்படியும் அறிவுறுத்தும் முப்பது (30) நாள் இன்றியமையா அறிவிப்பும் ஆகும். தொகையைச் செலுத்தத் தவறினால், சொத்தானது அதிகாரப்பூர்வ அலுவலரின் / ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்தின் விரும்பரீமைக்கேற்ப கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(5)-இன் பரிந்துரைக்கப்பட்டுள்ள எந்த முறையிலும்படியும் விற்பனை செய்யப்படும்.

ஓம்/-
நாள் : 17.02.2026 **அதிகாரப்பூர்வ அலுவலர், ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட்.**
இடம் : மும்பை **(ஓம்காரா PS07/2023-24 டிரஸ்ட்டின் டிரஸ்ட்டியாகச் செயல்படும் முறையில்)**

efl by geef ICICI

எலக்ட்ரானிகா கபைனான்ஸ் லிமிடெட்
ஆடும்பர், 101/1, எரண்டவானே, டாக்டர் கெட்கர் சாலை, புனே 411004, மகாராஷ்டிரா, இந்தியா

பொது அறிவிப்பு - சரணடைந்த இயந்திரங்களின் விற்பனை

கடன் வாங்கிய **மைக்ரோ மெஷின் டூல்ஸ் (செங்கையான்னா, தமிழ்நாடு